பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

12 07 2025 **SATURDAY** 6 45 **AM**

வணக்கம்-மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மத்திய அரசின் பல்வேறு துறைகளுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 51 ஆயிரம் பேருக்கு பணிநியமன ஆணைகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று வழங்குகிறார்.
- **சென்னையில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் பணிநியமன ஆணைகளை வழங்குகிறார்.
- நாட்டின் இணக்கமான வணிகத்திற்கு தேவையான கட்டமைப்பை உருவாக்குவதில் அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி தெரிவித்துள்ளார்.
- தேர்தலை கருத்தில் கொண்டு மகளிர் உரிமைத் தொகைக்கான விதிகளை தமிழக அரசு தளர்த்தியுள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.
- தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் குரூப்-4 தேர்வு இன்று மாநிலம் முழுவதும் நடைபெறுகிறது.
- இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான ஐந்தாவது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று பர்மிங்காமில் நடைபெறுகிறது.

>>>>>><<<<<<

மத்திய அரசின் பல்வேறு துறைகளுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 51 ஆயிரம் பேருக்கு பணிநியமன ஆணைகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று வழங்குகிறார்.

புதுதில்லியில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு காணொலி வாயிலாக அவர்களிடம் பிரதமர் உரையாற்றவுள்ளார்.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும் என்ற பிரதமரின் உறுதிப்பாட்டை நிறைவேற்றும் வகையில் வேலைவாய்ப்பு திருவிழாக்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

16வது முறையாக நடைபெறும் இந்த விழாவில் ரயில்வே, உள்துறை, சுகாதாரம், தொழிலாளர் நலன், அஞ்சல் உள்ளிட்ட மத்திய அரசின் பல்வேறு துறைகளுக்கு 51 ஆயிரம் பேர் புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

நாடுமுழுவதும் இதுவரை நடைபெற்ற வேலைவாய்ப்பு திருவிழாக்களில் 10 லட்சத்திற்கும் அதிகமானோருக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

சென்னை, ஐசிஎப்-ல் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கலந்து கொண்டு பணிநியமன ஆணைகளை வழங்கவுள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் ஐசிஎப் பொதுமேலாளர் திரு. சுப்பாராவ் உள்ளிட்ட மத்திய அரசின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த உயரதிகாரிகள் கலந்து கொள்கின்றனர்.

>>>>>><<<<<<

நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் இணக்கமான வணிகத்திற்கு தேவையான கட்டமைப்பை உருவாக்குவதில் மத்திய அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று தடையற்ற வர்த்தகத்திற்கான சீர்மிகு அறிவியல் என்ற மையப்பொருளில் நடைபெற்ற வர்த்தக மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அவர், வணிகம் செய்வதற்கான நடைமுறைகளை அரசு எளிமைப்படுத்தியுள்ளதாக கூறினார்.

மத்திய வருவாய் கட்டுப்பாட்டு ஆய்வகம், மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியம் ஏற்பாடு செய்திருந்த இந்த மாநாட்டில், 400க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

>>>>>><<<<<<

சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ளதால் தான் மகளிர் உரிமைத் தொகைக்கான விதிகளை தமிழக அரசு தளர்த்தியுள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதிக்கு உட்பட்ட திருச்சிற்றம்பலம் பகுதியில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்ட அவர், இதன்மூலம் கூடுதலாக 30 லட்சம் பேருக்கு உரிமைத்தொகை வழங்க அரசு திட்டமிட்டுள்ளதாக தெரிவித்தார்.

அஇஅதிமுக ஆட்சியில் தமிழகத்தில் பல கல்லூரிகள் திறக்கப்பட்டதாகவும், விழுப்புரத்தில் தொடங்கப்பட்ட ஜெயலலிதா பல்கலைக் கழகத்தை திமுக அரசு ரத்து செய்துவிட்டதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி குறை கூறினார்.

>>>>>><<<<<<

திருவள்ளூர் மாவட்டம், அத்திப்பட்டு – கும்மிடிப்பூண்டி இடையே சுமார் 23 கிலோமீட்டர் தூரத்திற்கு 3வது மற்றும் 4வது ரயில்பாதைகள் அமைக்கும் பணிகளை இரண்டாண்டுகளில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்த வழித்தடம் சென்னை துறைமுகம் - எண்ணூர் காமராஜர் மற்றும் காட்டுப்பள்ளி துறைமுகங்களை இணைக்கும் வகையில் மேற்கொள்ளப்படவுள்ளது.

காமராஜர் துறைமுகத்தில் உள்ள சரக்கு பெட்டக முனையத்தையும் இணைக்கும் வகையில் இந்தப் பாதை அமைக்கப்படுகிறது.

இந்த புதிய ரயில் பாதையால், பழவேற்காடு ஏரி, பூண்டி ஏரி, பஞ்சமுக ஆஞ்சநேயர் சுவாமி கோயில், திருவள்ளூர், திருவொற்றியூர், பெரியபாளையம், திருத்தணி ஆகிய இடங்களில் உள்ள முக்கியமான கோவில்களுக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கும் என்றும் ரயில்வே கூறியுள்ளது.

>>>>>><<<<<<

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் குரூப்-4 தேர்வு இன்று மாநிலம் முழுவதும் நடைபெறுகிறது.

3 ஆயிரத்து 935 பணியிடங்களை நிரப்புவதற்கான இந்த தேர்வை 13 லட்சத்து 89 ஆயிரத்து 738 பேர் எழுதுகின்றனர்.

இதற்காக 38 மாவட்டங்களில் 314 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தேர்வு நடைபெறுவதை கண்காணிக்க 4 ஆயிரத்து 50 கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

>>>>>><<<<<<

உலக காகிதப் பை தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்த்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுப் பொருளை பயன்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்நாளில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் வைட் - விஜயகுமார் 45 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ், தென்காசி மாவட்டத்தில் உளுந்து, மக்காச்சோளம், நிலக்கடலை, நெல் ஆகியவற்றுக்கான காப்பீட்டு தொகையை செலுத்தி பயனடையுமாறு விவசாயிகளை மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

தங்களது பகுதியில் உள்ள பொதுசேவை மையத்தில் ப்ரீமியத் தொகையை செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - செந்தில் 43 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட **Astra** ஏவுகணை நேற்று வெற்றிகரமாக பரிசோதித்து பார்க்கப்பட்டது.

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் இந்திய விமானப்படை ஆகியவை இணைந்து இந்த சோதனையை நடத்தின.

ஒடிசாவில் உள்ள சுகோய் 30 ஏவுதளத்திலிருந்து, ஏவப்பட்ட ஏவுகணை, இலக்கை துல்லியமாக தாக்கியதாக பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.

வானில் மிக வேகமாக பறந்த இலக்கை, இந்த ஏவுகணை வெற்றிகரமாக தாக்கி துல்லியமாக அழித்ததாகவும், இது அந்த ஏவுகணையின் துல்லியம் மற்றும் நம்பிக்கையை உறுதிப்படுத்தியுள்ளது என்றும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

இந்த சோதனை வெற்றி பெற்றதை அடுத்து, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம், இந்திய விமானப்படையினருக்கு, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் பாராட்டு தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

இருவரிச் செய்திகள்

செமி கண்டக்டர் உற்பத்திக்கு இந்தியாவிற்கு ஜப்பான் முழுஒத்துழைப்பு வழங்கும் என்று இந்தியாவுக்கான அந்நாட்டு தூதர் திரு. **Ono Keiichi** தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

இந்தியா – கிரீஸ் கடற்படையினருக்கு இடையேயான கூட்டுப் பயிற்சி ஒத்திகை மும்பை அருகே நடைபெறவுள்ளது.

>>>>>><<<<<<

1984ஆம் ஆண்டு தில்லியில் நடைபெற்ற சீக்கியர்களுக்கு எதிரான வன்முறையின் போது, சாட்சிகளாக இருந்தவர்களிடம், தில்லி சிறப்பு நீதிமன்றத்தில் நேற்று வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன.

>>>>>><<<<<<

குஜராத் மாநிலம், வதோதராவில் பாலம் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 20-ஆக அதிகரித்துள்ளது.

>>>>>><<<<<<

தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலினை, சென்னையில் நேற்று சிங்கப்பூர் உள்துறை அமைச்சர் திரு. கே. சண்முகம் சந்தித்து பேசினார்.

>>>>>><<<<<<

ரைஸிங் தூத்துக்குடி திட்டத்தில் தகுதியான படித்த இளைஞர்கள் மற்றும் புதிய தொழில் தொடங்க ஆர்வமுள்ள இளையோர் பங்கேற்கலாம் என்று மாவட்ட ஆட்சியர் திரு. இளம் பகவத் அறிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகளை மாவட்ட ஆட்சியர் திரு. பிரசாத் நேற்று ஆய்வு செய்தார்.

>>>>>><<<<<<

கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகமும், தமிழ்நாடு அறிவியல் இயக்கமும் இணைந்து நடத்தும் 14வது புத்தகத் திருவிழா ஓசூரில் நேற்று தொடங்கியது.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான ஐந்தாவது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

பர்மிங்காமில் இந்தப் போட்டி இரவு 11 மணிக்கு தொடங்குகிறது.

>>>>>><<<<<<

இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று இந்தியா முதல் இன்னிங்ஸில் ஆட்டநேர இறுதியில் 3 விக்கெட் இழப்புக்கு 145 ரன் எடுத்தது.

கே.எல். ராகுல் 53 ரன்னுடனும், ரிஷப் பந்த் 19 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

முன்னதாக, இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 387 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

>>>>>><<<<<<